


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025) முகாம் அலுவலகத்தில், வி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் வி.ஜி. சந்தோசம், மேலாண்மை இயக்குநர் வி.ஜி.பி. ரவிதாஸ் மற்றும் வி.ஜி.பி. ராஜாதாஸ் ஆகியோர் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி குடும்பத்தினருடன் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முகாம் அலுவலகத்தில் மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ஆணையத் துணைத் தலைவர் – எழுத்தாளர் இமையம் சந்தித்து தன்னுடைய புதிய சிறுகதைத் தொகுப்பான "தண்டகாரண்யத்தில் சீதை" நூலை வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



ஜெயராமபுரத்தில் பொல்லான் மணிமண்டபம் கட்டுவதற்கான தன்னார்வமாக இடம் வழங்கிய ஆறு குடும்பத்தாருக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் சு. முத்துசாமியுடன் இணைந்து ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் பட்டா வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் ப. அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை – திருக்கோவிலூர் சாலையில் 27 ஆம் தேதி அன்று

# "வேளாண் கண்காட்சி - கருத்தரங்கம்" முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, டிச. 26-

திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைபள்ளி எதிரில் முதலமைச்சர் அவர்களால் டிசம்பர் 27, 2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு தினங்களில் நடைபெறும் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்- 2025" விழாவில் உழவர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்றுப் பயன்பெற வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அழைப்பு வருமாறு:

தமிழ்நாட்டில் உழவர்களின் நலனை முன்னிறுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மைத்துறை, வேளாண்மை- உழவர் நலத் துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையும் அறிமுகப் படுத்தப்பட்டது. வேளாண்மை, சார்புத் துறைகளுக்கென கடந்த ஐந்து வேளாண்மை நிதி நிலை அறிக்கைகளில் ரூ.1,94,076 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



வேளாண் வணிகத் திருவிழா!

இவற்றின் ஒரு பகுதியாக, உழவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் ஆண்டுதோறும் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், இந்த ஆண்டின் முதல் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்" தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 11.06.2025 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் விஜயமங்கலத்திலும், இரண்டாவதாக "வேளாண் வணிகத் திருவிழா" நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் 27.09.2025 அன்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றன. உழவர் பெருமக்கள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் திரளாகப் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டின் மூன்றாவது நிகழ்வாக வேளாண்மையில் நவீன தொழில் நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், உயர்விளைச்சல் தர வல்ல புதிய பயிர் இரகங்கள், பாரம்பரிய இரகங்கள், அறுவடை பின்சார் மேலாண்மை நுட்பங்கள், மதிப்புக்கூட்டும் நுட்பங்கள், வேளாண்மையில் மின்னணு தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்தும் நுட்பங்கள், உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு நுட்பங்கள், பயிர்க்கடன், பயிர்க்காப்பீடு உள்ளிட்ட சேவைகள், ஏற்றுமதி தொடர்பான விழிப்புணர்வு போன்ற பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து விவரங்களையும் உழவர்கள், மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள் இயற்கை நல ஆர்வலர்களிடையே கொண்டு சேர்த்திடும் வகையில் வரும் 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு தினங்களில் திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு - 2025" விழாவினை மிகச்சிறப்பாக நடத்த தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்துவருகிறது.

### முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.12.2025 அன்று தொடங்கி வைத்து, 80,571 உழவர்களுக்கு ரூ.669 கோடி மதிப்பிலான திட்டப் பலன்களை வழங்கிச் சிறப்பிக்க உள்ளார்கள்.

வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற அரசுத் துறைகள் தங்கள் செயல்பாடுகள், திட்டங்களைக் காட்சிப்படுத்த உள்ளார்கள், நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், விதை ஆகியவற்றின் உற்பத்தியாளர்கள், வங்கிகள், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேளாண் உற்பத்திக்குத் தேவையான புதிய இரகங்களின் விதைகள், காய்கறி விதைகள், பழ வகைகளில் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்ட உரக்கலவை, உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் உள்ளார்கள்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவங்கள், பாரம்பரிய உணவு உற்பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள் உணவு பதப்படுத்தும் அமைப்புகளும் பங்கேற்கின்றன.

இதற்கென 250க்கும் மேற்பட்ட உள் மற்றும் வெளிப்புறக் காட்சி அரங்குகள் அமைக்கப்படுள்ளன.

நெல் சாகுபடித் தொழில்நுட்பங்கள், கரும்பில் பூச்சி, நோய் மேலாண்மைக்கான நவீன தொழில்நுட்பங்கள், இயற்கை மற்றும் உயிர்ம வேளாண்மை தொழில்நுட்பங்கள், வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்களின் இன்றைய நிலையும் எதிர்காலத் தேவைகளும், பயறு வகைப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகள், காய்கறி உற்பத்திக்கான உயர் தொழில்நுட்பங்கள், மலர்கள் சாகுபடிக்கான உத்திகள், எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான உயர் விளைச்சல் தொழில்நுட்பங்கள், பண்ணை வருமானத்தை உயர்த்துவதற்கு ஏற்ற உப தொழில்கள், உயர் வருமானம் பெற மண்டலத்திற்கேற்ற வேளாண் காடுகள், சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய இரகங்களின் மருத்துவ குணங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் பொருட்களின் விநியோகத் தொடர் மேலாண்மை, வேளாண்மையில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் விவசாயிகள் தங்களின் அனுபவத்தின் மூலம் வகுத்துள்ள தீர்வுகள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும். இக்கருத்தரங்குகளில் தொழில்நுட்ப வல்லுநர்களும், அனுபவமிக்க வேளாண் பெருமக்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார்கள்.

வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பெருவாரியான வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் உழவர்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 27.12.2025 அன்று துவக்கி வைக்கப்பட உள்ள வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் உழவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டு பயன்பெறக் கேட்டுக்கொள்கிறேன் என்று வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)பணிமனை நிர்வாகிகள் தேர்தல் இறுதி வேட்பாளர்கள் பட்டியல் இன்று (25.12.2025) வெளியிடப் படுவதாக இருந்தது. தொடர் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதால் தேர்தல் ஆணையாளர் வேண்டுகோளுக்கிணங்க 03.01.2026 அன்று இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும். தேவைப்படின் பணிமனைகள் தோறும் வாக்குப் பதிவு 11.01.2026 அன்று காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

| | |
|---|---|
| **கலைஞரகம்** | **(மு.சண்முகம், Ex.MP)** |
| சென்னை – 17 | பொதுச்செயலாளர், |
| நாள்: 25.12.2025 | தொ.மு.ச. பேரவை |



கும்மிடிப்பூண்டி தொகுதி, பூண்டி ஒன்றியம், வெள்ளாத்துகோட்டை ஊராட்சிய ஒன்றிய துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிர்களுக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டுத் நிதியிலிருந்து மேசை, நாற்காலிகளை சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் ஜான்(ஏ) பொன்னுசாமி, கா.ச.தெதீசன், சிவய்யா, கா.சம்பத், விஜயன், ஸ்ரீராம், டி,அர்.கே.வாசு, நாகராஜ், பாபு, பிரபாகர், சாய்குமார், சித்ராபாபு, நாளயினி, டார்த்தி, வள்ளி, என்.எம்.சுப்பிரமணி, ரகு, குருமூர்த்தி, வேல்முருகன், நாகபுஷணம், விஜயமாலா பாஸ்கர், பூபாலன், ஜெயவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட

# விக்டோரியா பொது அரங்கம் இன்று முதல் பார்வையிடலாம்!

## மாநகராட்சி இணையதளம் மூலம் கட்டணமின்றி முன்பதிவு செய்யலாம்!

*சென்னை, டிச. 26-*

*தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தினை பொது மக்கள் 26.12.2025 முதல் சென்னை மாநகராட்சி இணையதளத்தின் மூலம் கட்டணமின்றி முன்பதிவு செய்து பார்வையிடலாம்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ரூபாய் 32.62 கோடி மதிப்பீட்டில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தினை கடந்த 23.12.2025 அன்று திறந்து வைத்தார்.*

*சென்னையின் அடையாளமாகத் திகழும் விக்டோரியா பொது அரங்கம் 1887-ஆம் ஆண்டு ராணி விக்டோரியாவின் வைர விழாவை நினைவு கூர்ந்து கட்டப்பட்டது. இந்த அரங்கம் சென்னையின் சமூக, பண்பாட்டு வரலாற்றின் முக்கிய சாட்சியாக விளங்குகிறது. முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ள இந்த அரங்கம், தற்போது அருங்காட்சியகமும், கலை மேடையும் கொண்ட ஒரு பொது பண்பாட்டு தளமாக மாற்றப்பட்டுள்ளது.*

*விக்டோரியா பொது அரங்கத்தின் தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியானது, அரங்கம் கட்டுவதற்கு உதவிய ஆதரவாளர்கள், கட்டடக் கலைஞர், ஒப்பந்ததாரர், இங்கு உரையாற்றிய தலைவர்கள், நீதிக்கட்சியின் எழுச்சி, நாடகமும் சினிமாவும், விளையாட்டுகளின் வரலாறு ஆகியவற்றை விரிவாகப் பதிவு செய்கிறது. வெளிப்புறப் பகுதியில் டிராம் வண்டி, தொல்லியல் காட்சிப் பகுதி ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.*

*பக்கிங்காம் கால்வாயில் படகு, பழைய ஸ்கூட்டர், ரிக்ஷா போன்ற நினைவூட்டும் செல்ஃபி பாயிண்ட்கள் மூலம் பழைய சென்னை நகரின் நினைவுகள் உயிர்ப்பிக்கப் படுகின்றன.*

*விக்டோரியா பொது அரங்கம் அருங்காட்சியகக் கண்காட்சியை பொதுமக்கள் 26 டிசம்பர் 2025 முதல் பார்வையிடலாம்.*

*விக்டோரியா பொது அரங்கத்தினைப் பொதுமக்கள் பார்வையிட சென்னை மாநகராட்சியின் இணையதளத்தின் வாயிலாக (https://chennaicorporation.gov.in/gcc/) VICTORIA PUBLIC HALL என்பதைத் தேர்வு செய்து கட்டணமின்றி முன்பதிவு செய்து பார்வையிடலாம். முன்பதிவு மூலம் மட்டுமே பார்வையாளர்கள் விக்டோரியா பொது அரங்கத்தினைப் பார்வையிட அனுமதிக்கப்படுவர். காலை 8.30 மணிக்கு வழிகாட்டியுடன் பார்வை நேரம் தொடங்கி, மாலை 6.30 மணிக்கு நிறைவடைகிறது. ஒவ்வொரு 1.30 மணி நேர இடைவெளியிலும் அதிகபட்சமாக 60 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.*

*விக்டோரியா பொது அரங்கின் கலை அரங்கமும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது. இதனை, ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யலாம். கலை மற்றும் பொதுவான நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட பின்னர் நிகழ்ச்சியின் நோக்கம் பரிசீலித்து அனுமதி வழங்கப்படும்.*

### துணை மேயர் மு.மகேஷ்குமார் – ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பங்கேற்பு! சென்னை மாநகராட்சியின்

# 19 மருத்துவமனைகளுக்கு ரூ. 89.72 இலட்சம் மதிப்பிலான மருத்துவக் கருவிகள்!

## மேயர் திருமதி ஆர். பிரியா வழங்கினார்!

சென்னை,டிச.26-

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரம் மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் சார்பில் மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் 24.12. 2025) அன்று தண்டையார் பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்றது.




இக்கூட்டத்தில், மேயர் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மாநகராட்சியின் 16 நகர சமுதாய நல மையம் மற்றும் 24 மணி நேரமும் இயங்கும் 3 மகப்பேறு மருத்துவமனைகளில் உள்ள அறுவை அரங்குகளுக்கு கிருமிகளிடமிருந்து பாதுகாத்திட தூய்மைப்படுத்தும் கருவி, மகப்பேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவசர காலங்களில் அனுமதிக்கப்படும் இதய துடிப்பு குறைபாடு உள்ளவர்களை மாரடைப்பில் இருந்து காக்க இதயத் துடிப்பை சீராக்கும் கருவி (Biphasic Defibrillator) மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளுக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார்களின் கர்ப்பம் மற்றும் பிரசவத்தின்போது குழந்தைகளின் இதயத் துடிப்பு, தாயின் கருப்பை சுருக்கங்களை கண்டறிந்து சரிபார்க்க தேவைப்படும் Continuous Cardiotocography CTG கருவி என ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தலா 3 கருவிகள் என 19 மருத்துவமனைகளுக்கு ரூபாய் 89.73 இலட்சம் மதிப்பிலான மருத்துவக் கருவிகளை வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா பேசியதாவது:**

முதல்வர் அவர்கள் மக்கள் நல வாழ்விற்காக பல்வேறு சுகாதாரத் திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மருத்துவமனைகளில் சிறப்பான உட்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டத்தில் தெரிவித்த ஆலோசனையின்படி, நாய்களைக் கட்டுப்படுத்திட நாய்கள் இனக் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், மக்கள் நலவாழ்விற்கான சேவைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மழைகாலத்தினை முன்னிட்டு, கொசுக்கள் உற்பத்தியினை கட்டுப்படுத்தும் விதமாக கொசு ஒழிப்புப் புகை பரப்புதல் நீர் நிலைகளில் கொசு ஒழிப்பு மருந்து தெளித்தல் உள்ளிட்ட தொடர்புடைய பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நடைபெறும் மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டத்தில் வழங்கப்படும் ஆலோசனைகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து, தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 5.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் துணை செவிலியர் பயிற்சி கட்டடப் பணிகளை மேயர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், துணை மேயர் மு.மகேஷ்குமார், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், மாநகர நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், கூடுதல் மாநகர நல அலுவலர் டாக்டர் லட்சுமி தேவி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பவித்ரா, திருமதி புனிதவதி எத்திராஜன், திருமதி பூர்ணிமா, திருமதி ரேணுகா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.99, பங்கஜம் தெருவில் அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மராமத்துப் பணிகள் குறித்து ஆய்வு செய்து, அங்கு வசித்துவருவோரிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்துக் கேட்டறிந்தார்.